# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar **Case No. CC. 198/2025**

Miscellaneous

Preliminary Register

Deposition of **PW-2 Additional Witness** /

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகன் | Father Name | : | ராஜேந்திரன் |
| Village | : | | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | காவல் உதவி ஆய்வாளர்- வலங்கைமான் காவல் நிலையம் |
| Religion | : | | Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 25th day of March 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 1 இறந்துவிட்டார். பட்டியல் சாட்சி 3, அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் பிறழ் சாட்சியாக மாறிவிட்டார். பட்டியல் சாட்சி 2 உடல் நல குறைவினால் படுத்த படுக்கையாக உள்ளார். பட்டியல் சாட்சி 4 வெளிநாட்சி வசித்து வருகிறார், ஆனால் எந்த நாட்டில் வசித்து வருகிறார் என்று தெரியவில்லை. இவ்வழக்கின் காவல் அதிகாரி திரு. சிவகுகன் என்பவருடன் நான் பணிபுரிந்ததால் அவருடைய கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்பதனால் இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையில் சட்டப்பிரிவு 311 குவிமுச மற்றும் ச/பி.348 BNSSன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு

அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.01.2019ம் தேதி மாலை 04.30 மணியளவில் வலங்கைமான் காவல் உதவி ஆய்வாளர் திரு. சிவகுகன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது மனோகரன் என்பவரும் எதிரி அருண்குமாருடன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண் 29/2019 ச/பி.379 இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். புகார் மனு **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் உதவி ஆய்வாளர் அன்றைய தினமே மாலை 04.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்துள்ளார். அவரது விசாரணையில் சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் உண்மையென்று தெரியவரவே பட்டியல் சாட்சி 1 மூலம் ஆஜர்படுத்தப்பட்ட எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இத்துடன் அவருடைய புலன் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விசாரணை அதிகாரி சொன்ன நாள் நேரத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை வழக்கு எதுவும் பதியப்படவில்லை என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி சம்பவயிடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி சொன்ன நாள் நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளிடமிருந்து எவ்வித தடயப்பொருட்களோ எவ்வித ஒப்புதல் வாக்குமூலமோ யார் முன்னிலையிலும் பெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு தேவையாண ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் படிவம் 95 மற்றும் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை

தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கிற்கு ஆதரவாகவும் எதிரிகளுக்கு எதிராகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.25 18:06:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.